பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர்: 7 | 1963, ஏப்ரில் 30 ந் திகதி | இதழ்: 6

21 MAY 1963

# தொழில் அமைச்சரின் மே தினச்செய்தி

மே தினத்தின் சாரமே "சமாதானம், உழைப்பு, ஒற்றுமை" என்றே தொழிலாளர் கருதுகின்றனர். இலங்கையும் உலகின் இதர நாடுகளைப் போன்று இத்தினத்தை தொழிலாளருக்கான ஒரு விடுமுறையாகக்கொண்டாடுகிறது.

இவ்வாறு உழைக்கும் மக்களையும், பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்கு அவர்கள் புரிந்துள்ள பணியையும் கௌரவிக்கும் போதே, உலகையே பீடித்துள்ள வறுமை, பசி, பிணி ஆகியவற்றுக்கு எதிராக மக்களும் அரசாங்கங்களும் இடையறுது போராடிவருகின்றன என்பதை மறந்து விடக்கூடாது. மே முதற்திகதி புதிய சாதனைகளை எய்தும் பாதையில் வரும் ஒரு விடுமுறை தினமேயாகும்.

தொழிலாளர் இயக்கப் பரிணாமத்தில், அவர்கள் குறிப்பிடத்தக்க அனுகூலங்களை ஈட்டியுள்ளனர். ஒன்றுகூடிச் செயற்படும் உரிமை, கூட்டாகப் பேரம் பெறுதல, வேலை நிறுத்தங்களின் மூலம் பொருளாதார பலவந்தங்களை மேற்கொள்ளுதல், தனியாரின் அரசியல் அந்தஸ்தை உயர்த்துவதற்குத் தொழிலாளரின் கூட்டுச் சக்தியைப் பயன்படுத்துதல் முதலானவை இத்தகைய அனுகூலங்களிற் சில. இந்த உரிமைகளைப் பெற்றதனுல் சில கடமைகளும் ஏற்பட்டன. முகாமையின் உரிமைகளை அங்கீகரித்தல், நியாயத்தை வளர்க்கவும், சமூகத்தினிடம் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்வதற்காகவும் தன் அடக்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்துதல் முதலியன அத்தகைய கடமைகளுள் சிலவாகும்.

ஜனநாயக சோஷலிஸத்தையே எங்கள் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இது, எங்கள் பாரம்பரியம், கலாச்சாரம், மக்கள் ஜனநாயகத்தைப்பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கள் ஆகியவற்றுக்கு இயைந்ததாக இருப்பதுடன், நாட்டிற்கு வெற்றியும் நிச்சயமாகக் கிடைக்கும். யதார்த்த நிலை புரியாத சிலர், அரசாங்கத்தின் கொள்கைகள், தலை தெறிக்கும் வேகத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோருகின்றனர். யதார்த்தமற்ற நிலைக்கு ஆளாகுபவர்கள் முன்னேற்றத்துக்கு விரோதமானவர்களின் கைக்கு உட்பட்டுவிடுகிறார்கள். ஸ்திரமான, நிதானமான, எங்கள் சோஷலிஸ

(3 பக்கம் பார்க்க)

## சாகுபடி செய்யப்படாத காணி மதிப்பீடு

### விவசாய அமைச்சரின் முயற்சி

காலபோகங்களின்போது சாகுபடி செய்யப்படாமலிருக்கும் நெற்காணிகளின் விஸ்தீரணத்தையும் அதற்கான காரணங்களையும் அறியும் பொருட்டு உடனடியாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவேண்டுமென்று விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் திரு. சி. பீ. டி சில்வா அவர்கள் பணித்துள்ளார்.

இம்மதிப்பீட்டில் சேகரிக்கப்படும் தகவல்கள், இவ்வாறுன காணிகளில் விவசாயம் செய்வதற்கும் அதனுல் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

ஆரம்பத்தில் அனுராதபுரம், மட்டக்களப்பு, காலி ஆகிய மாவட்டங்களில் மட்டும் இம்மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அனுராதபுரத்திலும் மட்டக்களப்பிலும் பெருமளவு விஸ்தீரணமான காணிகள் சாகுபடி செய்யப்படாமலிருக்கின்றன. இந்நாட்டின் தென்மேற்குப் பாகத்திலுள்ள தன்மையை காலியில் காணப்படும் நிலைமைகள் புலப்படுத்தும்.

இந்நாட்டின் இதர பாகங்களிலும் எடுக்கப்படவேண்டிய தகுந்த நடவடிக்கைகளை இந்த அமைச்சு மதிப்பிடுவதற்கு இம்மூன்று மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு உதவி செய்யும். இந்நாடு பூராகவும் உடனடியாக இந்த மதிப்பீட்டைச் செய்ய வேண்டியேற்படும்பட்சத்தில் செலவாகும் காலமும் உழைப்பும் இதனுல் மிச்சப்படுத்தப்படுகிறது.

இம்மதிப்பீடுபற்றி விவாதிப்பதற்கு அமைச்சில் கூடிய மாநாடொன்றில் விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சின் பதில் நிரந்தர செயலாளர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்கள் சாகுபடி செய்யப்படாமலிருக்கும் காணிகளைப் பண்படுத்தி ஒவ்வொரு வருடத்திலும் சிறுபோகம், பெரும் போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் பயிர்செய்வது உள்ளூர் அரிசி உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் விரைவான முறைகளிலொன்று என்று விளக்கிக் கூறினர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு அரசாங்க

(4 ம் பக்கம் பார்க்க)

## பீரங்கிப்படைவீரருக்கு உதவ முயற்சி

கொழும்பிலுள்ள இராணுவ மருத்துவ மனையில் படுத்த படுக்கையில் அசக்தராகக் கிடக்கும் பீரங்கிப் படைவீரர் ஜனுப் எஸ். டீ. எம். முகைதீனுக்கு ருஷ்யா நம்பிக்கையளித்திருக்கிறது.

நீண்ட தூரப் பயணத்தால் ஜனுப் முகைதீனுடைய தேகநிலை பாதிக்கப்படக் கூடுமாதலால் அவர் ருஷ்யாவில் சிகிச்சை பெறுவது உகந்ததல்லவாயினும் அவர் இப்போதிருக்கும் இடத்திலேயே வைத்து அவருக்குச் சிகிச்சையளிக்க முடியுமென்று தாங்கள் சிபார்சு செய்யப்போவதாக ருஷ்ய வைத்திய நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட பத்திரிகைச் செய்தியொன்று பின்வருமாறு கூறுகிறது :—

1962 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பீரங்கிப்படைவீரர் முகைதீனுக்குத் துரதிருஷ்டவசமான விபத்து ஏற்பட்டு அவரை அசக்தராக ஆக்கிய நாள்முதல் அவர் தொடர்ந்து வைத்திய பராமரிப்பில் இருந்து வந்துள்ளார். கொழும்பு இராணுவ மருத்துவ மனையிலும் பொது மருத்துவ மனையிலும் இருந்துள்ளதோடு அங்கு இத்துறையில் வல்லுனர்களால் சிகிச்சையும் அளிக்கப்பட்டுள்ளார். இந் நாட்டில் கிடைக்கக்கூடியதாக இருந்த சிறந்த வைத்திய சேவைகளை அவர் பெறுதற்கு பிரதம மந்திரி தனிப்பட்ட சிரத்தை காண்பித்துள்ளார்.

வெளிநாட்டிலுள்ள தகுந்த வைத்திய நிலையமொன்றுக்கு அவரை அனுப்பி அங்கு சிகிச்சையளிப்பதன்மூலம் அவருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு நம்பிக்கையிருப்பதாக வைத்தியர்கள் கருத்துத் தெரிவித்ததால் இலங்கையிலுள்ள ருஷ்ய ஸ்தானிகராலயத்தில் பீரங்கிப் படைவீரர் முகைதீனை ருஷ்யாவிலுள்ள மருமத்துவ மனையொன்றில் சேர்த்துச் சிகிச்சையளிப்பதற்கான ஒழுங்குகளைச்

(4 ம் பக்கம் பார்க்க)

## இரு மீன்பிடி துறைகள்

தங்காலை, பேருவலை ஆகிய இரு இடங்களிலும் மீன்பிடி துறைகளை அமைக்க மீன்பிடிப் பகுதி உத்தேசித்துள்ளது. தங்காலையில் அமைக்க இருக்கும் மீன்பிடித் துறைமுகத்திற்கு நாற்பத்திரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாவும், பேருவலைத்துறைமுகத்திற்கு நாற்பது லட்சம் ரூபாவும் செலவாகும்.

இந்த இரு வேலைத்திட்டங்களையும் மேற்கொண்டுள்ள துறைமுகக் கமிஷன் பூர்வாங்க வேலைகளை முடித்துள்ளது. இத்துறைமுகங்கள் பூர்த்தியானதும் ஒவ்வொன்றிலும் சுமார் 100 யந்திரப்படகுகள் நங்கூரமிட்டு நிற்பதற்கும், மீன்பிடிப்பருவமற்ற காலங்களிலும் மீன் பிடிப்பதற்கும் வகையேற்படும்.

## புதியசெலாவணிக் கட்டுப்பாட்டுவிதிகள்

இம்மாதம் 19 ஆம் திகதி வெளியான விசேஷ அரசாங்க வர்த்தமானியில் புதிய செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இலங்கைவாசிகள் தற்காலிகமாக வெளிநாடு செல்லும்போது எடுத்துச் செல்லும் ஆபரணங்களையும், இலங்கைக்கு வரும் வெளிநாட்டினர் இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்கிக் கொண்டு செல்வதையும், இப்புதிய விதிகள் ஓரளவிற்கு மட்டுப்படுத்துகின்றன.

இனிமேல் இலங்கையைவிட்டுத் தற்காலிகமாகச் செல்லும் இலங்கைவாசிகளில் பெண்கள் ஐந்நூறு ரூபா பெறுமதிக்கு மேலும் ஆண்கள் நூறு ரூபா பெறுமதிக்குமேலும் தமது ஆபரணங்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பிரதம சுங்க அதிகாரி அனுமதிப்பதன்படியே இலங்கைக்கு வரும் வெளிநாட்டினர் இங்கு உற்பத்தியாகும்பொருட்களை வாங்கிக்கொண்டு போகலாம். அவர்கள் இலங்கைக்கு வரும்போது கைவசம் வைத்திருந்ததாகப் பிரகடனப்படுத்திய பணத்தொகைக்குமேல் அவர்கள் வாங்கும் பொருட்களின் பெறுமதி இருக்கக் கூடாது என்ற விதி அனுசரிக்கப்படும்.

# யோகாசன சிகிச்சையின் சிறப்பு

விஞ்ஞான ஆக்கத்தினுல் பல துறைகளில் தற்போது நடக்கின்ற அதிசயங்கள் பலப்பல. அணுக்களுக்குள் இருக்கும் அபார சக்தியைக் கொண்டு, இந்த உலகையே அழிக்கும் அணுக்குண்டுகளைச் செய்து குவிக்கின்ருர்கள். அணுசக்தியைக் கொண்டு பல ஆக்கவேலைகளைச் செய்கிருர்கள். பாலைவனத்தைச் சோலைவனங்களாக மாற்றுகிருர்கள் மழையே இல்லாத இடத்தில் செயற்கை மழை பெய்விக்கிருர்கள். செயற்கைக் கோளங்களை ஏவி வானத்தையே வெற்றி கொள்கிருர்கள். மற்ற மற்ற கோளங்களுக்குச் செல்ல ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. உதாரணமாக பலமுறை மனிதன் வானவெளிப்பயணம் செய்தும் வந்துவிட்டான்.

சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி

இயந்திர உலகில் நடைபெறும் அதிசயங்களோ அநேகம். எதிர்காலத்தில் மனிதனுக்கே வேலையிருக்காது போல தோன்றுகிறது.

வைத்தியத்துறையில் ஆற்றும் விந்தைகளோ அநேகம். நின்று விட்ட இருதயத்தை உடனடியாக சிகிச்சையளிப்பதன் மூலம் ஓடச் செய்கிருர்கள். இருதயத்தையே உடலிலிருந்து தனியாகப் பிரித்தெடுத்து அதிலுள்ள கோளாறுகளை நீக்கிவிட்டு மறுபடி பொருத்தி விடுகிருர்கள். பிளாஸ்டிக்கினுல் மாற்று இருதயமே அமைத்து விடுகிருர்கள். மூளையில் பல நுணுக்கமான ஆபரேஷன்களைச் செய்கிருர்கள். மண்டை ஓடு உடைந்து விட்டால், வெள்ளி மண்டையோட்டை மாட்டி விடுகிருர்கள். கண் போனுல் மாற்றுக்கண் பொருத்தி விடுகிருர்கள். காது கேளாவிட்டால் கருவிகள் உபயோகிக்கலாம். பற்கள் போனுல் தான் என்ன ? மாற்றுப் பற்களைக் கொண்டு முன்னிலும் அழகாகச் சிரிக்க முடிகிறது. உடலில் எலும்புகள் உடைந்தால், பிளாஸ்டிக் எலும்பு, உலோக எலும்புகளை பொருத்தி விடுகிருர்கள். எந்த உறுப்புக்கள் பழுதடைந்தாலும் மாற்று உறுப்புக்களை பொருத்திவிடும் அளவு விஞ்ஞானத்துறை வளர்ச்சி அடைந்து வருகிறது. கிழவனுக்கு தைராய்ட் ஆபரேஷன் செய்து வாலிபனுக்கி விடுகிருர்கள்.

மற்றும் மக்களுக்கு உண்டாகும் நோய்களுக்கு, கண்டுபிடித்து வெளிவரும் மருந்துகள் கணக்கிலடங்கா. ஒரு நோய்க்கு ஒரு புது மருந்து கண்டுபிடித்து வெளிவந்த தென்ருல், பழையது எல்லாம் தள்ளிவிட்டு உடனே புது மருந்தை உபயோகிக்கத் தொடங்குவார்கள். வந்து சில மாதங்களுக்குள் வேறு மருந்து வந்ததும், பழையதை விட்டு, இந்த மருந்து தான் சரியானது என்று உபயோகிக்கத் தொடங்கி விடுவார்கள். இவ்வாறு இன்னமும் புதிய கண்டுபிடிப்புக்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

இவ்வளவு விஞ்ஞானம் வளர்ந்தும், மருந்துகள் பெருகியும், இன்னமும் சில நோய்களுக்குச் சரியான பரிகாரம் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆஸ்துமாவை எடுத்துக் கொள்வோம். அது கிருமிகளால் உண்டாகும் நோய் அல்ல. ஆஸ்துமாவை நோயிலேயே சேர்ப்பதில்லை. ஆனுல் ஆஸ்துமா வந்தவர்கள் படும் கஷ்டங்களைப் பார்த்தால் நோயாளிகளை விட அவஸ்தைப் படுவார்கள். நல்ல மூச்சாக ஒன்றை இழுத்துவிட முடியாதா என்று எங்குவார்கள். மூச்சுக் குழாய்களிலுள்ள தசைகள் சுருங்கி விடுவதினுலும், நுரையீரலில் உள்ள இரத்த நாளங்கள் சுருங்குவதாலும் ஆஸ்துமா உண்டாகிறது. இந்தச் சுருக்கங்களைப் போக்க வேண்டுமானுல், பிட்யூடரி கோளத்தின் ரசமும், அட்ரினேல் கோளத்தின் ரசமும் தேவை. அவை சரிவரக் கிடைக்காததினுலும், ரத்தத்தில் அதன் ரசம் சரியாகப்போதுமான அளவு கலக்காததினுலும் தான் ஆஸ்துமா வருகிறது.

எனவே பிட்யூடரி ரசச் சத்துள்ள மருந்தினுலும் அட்றினேல் ரசசத்துள்ள மருந்தினுலும் செய்த மருந்துகளை ஊசிமூலமாகவும், மாத்திரைகள் மூலமாகவும் ஆஸ்துமா நோயாளிகளுக்கு உபயோகிக்கிருர்கள். அதனுல் அவர்களுக்கு குணம் ஏற்படுகிறது. எந்த மருந்தை உட்கொண்டாலும் 4 மணி நேரத்திற்குள் அந்த மருந்துச்சத்தை மூத்திரக்காய்கள் வடிகட்டிவிடும். மறுபடி மறுபடி அவரவர்கள் ஆஸ்துமா நோயின் வேகத்திற்குத் தக அம் மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிலருக்கு ஒரு சில மாதத்தில் போய் விடும். ஆனுல் மறுபடியும் வரும். சிலருக்கு பலமாதத்தில் குணமாகும். அதுவும் மறுபடியும் வராமல் இருக்காது. சிலருக்கு எப்பொழுதும் இருந்து தொந்தரவு செய்து கொண்டேயிருக்கும். இதற்கு வேறு பரிகாரமே கிடையாது.

இதற்கென்றே ஆஸ்துமா பரிசோதனைக் கமிட்டி ஒன்றை நிறுவி டாக்டர்கள் பல சோதனைகளைச் செய்தார்கள். அவர்கள் கண்ட உண்மையென்னவென்ருல், ஆஸ்துமாவை முற்றிலும் மருந்துகளினுல் போக்க முடியாது. தற்கால சாந்திதான் அளிக்க முடியும். முற்றிலும் போக்க வேண்டுமானுல் சிலவித தேகப் பயிற்சிகள் செய்ய வேண்டும் என்று அவர்கள் முடிவை வெளியிட்டார்கள். அந்தத் தேகப் பயிற்சியில் பிற்யுடரிக்கும், அட்ரினேல் கோளத்திற்கும் பயிற்சியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனுல் நடைமுறையில் அபூர்வமாய் ஏதோ ஒரு சில டாக்டர்கள் தவிர, மற்றவர்கள் மருந்துகளைத்தான் உபயோகிக்கிருர்கள். தேகப் பயிற்சியை சிபாரிசு செய்வதில்லை. அது அவர்கள் தொழிலுக்கு புறம்பானது என்று நினைத்தார்கள் போலும்.

அதேபோல டயாபெடீஸ் என்ற நீர்வியாதியை எடுத்துக்கொள்வோம். விஞ்ஞானம் தந்த விடை, நீர் வியாதி வந்தவர், தன் ஆயுள் உள்ளவரை இன்சுலின் மருந்தை ஊசிமூலம் குத்திக் கொள்ள வேண்டும் என்பதே. இதற்கும் பல டாக்டர்கள் கூடி டயாபெடீஸ் பரிசோதனைக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி, பல பரீட்சைகள் செய்து முடிவை வெளியிட்டார்கள். இன்சுலின் ஊசி போடுவது தான் பரிகாரம் என்று சொல்லிவிட்டார்கள்.

இந்நோய் வந்தவர்கள் அவரவர்களுக்கு இருக்கும் சர்க்கரை சதவிகிதத்தை அனுசரித்து தினசரி ஊசிகளோ, ஒரு ஊசியோ, இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையோ போட்டுக் கொள்ள வேண்டும். உணவுப் பத்தியமும் அவ்வாறே. சர்க்கரைச் சத்து அதிகமிருந்தால் மாவுச் சத்துள்ள பொருள் சாப்பிடக் கூடாது. சர்க்கரை சாப்பிடக் கூடாது. சிறிதளவாக இருந்தால் சிறிதளவு சர்கரையும், அரிசி சாதம் போன்றவையும், சேர்த்துக் கொள்ளலாம். ஆயுள் உள்ளளவும் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி, ஊசியையும் ஏற்றிக்கொண்டு வாழ வேண்டும்.

இந்தக் கணக்கை டாக்டர்கள் நியமிப்பார்கள். அதைப் போல நடந்து கொள்ள வெண்டும். அவ்வாறு நடக்காமல் சிறிது ஆசைப்பட்டு சர்க்கரைப் பொருளோ, சாதமோ சாப்பிட்டுவிட்டால் உடனே நீரில் சர்க்கரை சத்து அதிகமாகிவிடும். ஊசியில் வெறுப்பேற்பட்டு போட்டுக் கொள்ளாமல் விட்டு விட்டால், நாளடைவில் சர்க்கரைச் சத்து அதிகமாகி குண்டிக்காய் பலவீனப்பட்டுவிடும். ரத்தம் சுத்தமாகாது. நரம்புப் பலவீனம், தளர்ச்சி, இளைத்தல், இரத்த சோகை, பார்வைக் குறைவு, பிளவைக் கட்டிகள் தோற்றல், இரத்த அமுக்கம், அடிக்கடி தாகம், பசி, களைப்பு, மயக்கம் முதலியன படிப்படியாக உண்டாகும்.

எனவே எப்பொழுதும் உணவு கட்டுப்பாடுடன் அவ்வப்போது டாக்டர்கள் மேற்பார்வையில் ஊசி போட்டுக் கொண்டே வாழ வேண்டும்.

இன்றைய விஞ்ஞானம் இதைவிட அதிகம் செய்ய முடியவில்லை.

ஆனுல் யோக ஆசனத்தில் இதற்கு நிச்சயமாகப் பரிகாரம் இருக்கிறது. ஆஸ்துமா, டயாபெடீஸ் என்ற நோய்களை யோக சிகிச்சை ஒன்றே மாற்றவல்லது.

தெய்வ திருவள்ளுனர் அவர்கள் :

"நோய் நாடி நோய் முதனுடி
யது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்று வெகுஅழகாகப் பொருத்தமாகவயித்தியத்தைப்பற்றிசொல்லியிருக்கிருர்.

முதலில் நோய் இன்னதென்று கண்டறியவேண்டும். பிறகு அந்த நோய் எதனுல் வந்தது என்ற காரணத்தைக் கண்டறியவேண்டும். அதன்பின் தான் அந்நோயைத் தீர்க்கும் வழியை வகுக்க வேண்டும். அந்த வழியையும் செய்ய வேண்டிய முறையில் செய்யவேண்டும் என்று சொல்லுகிருர்.

எல்லா நோய்களுக்குமே மருந்து தான் என்று சொல்லவில்லை. நோய்களைத் தீர்ப்பது எதுவாயினும் அது மருந்துதானே.

இந்த முறைகள் எந்த வயித்தியமானுலும் பொருந்துமல்லவா ? ஆங்கில வயித்திய முறையானுலென்ன, ஆயுர்வேத முறையானுல்லென்ன, சித்த வைத்திய முறையானுலென்ன, யூனுனி வைத்தியமானுலென்ன, ஹோமியோபதியானுலென்ன ? வீட்டு வைத்தியம், பாட்டி வைத்தியமானுலுமென்ன ? யோகாசனமானுலென்ன எல்லாவற்றிற்கும் திருவள்ளுவர் முடிவு தானே சரியானது.

நீர் வியாதி எதனுல் உண்டாகின்றது ? பாங்கிரியாஸ் எனும் கோளம் இன்சுலின் ரசத்தை சரிவர சுரப்பிக்காததினுல் டயாபெடீஸ் உண்டாகிறது. ரத்தத்திலுள்ள சர்க்கரைச்சத்தை இன்சுலின் ரசமானது மாற்றுகிறது. இன்சுலின் குறைவாகச் சுரந்தால் அதற்கு தகுந்தாற்போல சர்க்கரை சத்து மாறுதல் அடைகிறது. சிறுநீரை சோதித்து சர்க்கரை சத்தை இத்தனை சதவிகிதம் இருக்கிறது என்று கண்டு பிடிப்பார்கள். பின் அதற்குத் தக பத்தியம் வைப்பார்கள் ஊசியும் போடுவார்கள்.

யோகாசன சிகிட்சையில் அவ்வாறு குறைவாக அல்லது இன்சுலின் உற்பத்தி செய்யாமலேயே நிறுத்திவிட்ட பாங்கிரியாஸ் கோளத்திற்கு, பயிற்சி அளித்து புதுப்பிக்கின்றது. வயிற்றை நசுக்கும் சில ஆசனங்களின் மூலம் பாங்கிரியாஸ் கோளத்திற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பாங்கிரியாஸ் கோளத்திற்கும் தைய்ராய்ட் கோளத்திற்கும் தொடர்புண்டு. தைய்ராய்ட் கோள சிறிது பலவீனமாக இருந்தாலும் பாங்கிரியாஸ் சரியாக வேலைசெய்யாது. எனவே தைராய்ட் கோளத்திற்கு சர்வாங்காசனம் மூலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. தைராய்ட்டிற்கும் சிரசிலுள்ள பிட்யூடரிக்கும் தொடர்புண்டு. பிட்யூடரி கோளத்துடன் எல்லாக் கோளத்திற்கும் தொடர்புண்டு. சிரசாசனம் மூலம் பிட்யூடரிக்கும் பயிற்சி உண்டாகிறது. எனவே பாங்கிரியாசானது தன் எஜமான கோளங்களின் தூண்டுதலினுல் அது பழையபடி வேலை செய்ய சக்தி அடைகிறது. இன்சுலின் சரியானபடி சுரப்பிக்கின்றது. வெளியில் இருந்து ஊசி மூலம் இன்சுலின் குத்தி ஏற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் போய்விடுகிறது. டயாபெடீஸும் மறைந்து போகிறது.

இது திருவள்ளுவர் சொல்லியபடி நோய்தணிக்கும் வாய்ப்வடி வாய்ப்பச் செய்யும் முறையாகும்.

யோகாசனம் பழகுவதனுல் உடலிலுள்ள கோளங்கள் என்றும் ஆரோக்கியமாய் இருந்து, அதனதன் வேலைகளைச் சரியாக செய்யமுடிகிறது. அதனுல் எவ்வித தொத்து நோய்களும் யோகாசனம் செய்பவர்களுக்கு வருவதில்லை. ரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் எப்பொழுதும் பலசாலிகளாக இருந்து வரும். தொத்து நோய்க் கிருமிகளை கொல்லுகிறது.

மற்றும் உடல் இயக்கங்கள் சரிவர நடைபெற ஏதுவாகின்றது. பெண்களுக்கு பெண்மையும், ஆண்களுக்கு ஆண்மையும் வளர்க்கிறது. மனப் பண்பாடும் நன்கு அமைகிறது.

காற்றின் மூலமாக பரவும் க்ஷயம் சம்பந்தமான நோய்கள் பரவாமலிருக்கவும் யோகாசனம் ஒரு தடுப்பு முறையாகும்.

நம்மில் 100 க்கு 75 விகிதத்தினர்களுக்குக் க்ஷய நோய் பலரூபத்தில் பரவியிருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது. நாம் அவர்களோடு தான் கூடிவாழுகிறோம். அவர்கள் விட்ட மூச்சைத் தான் சுவாசிக்கிறோம். அவர்கள் சுவைத்த பாத்திரத்தைத் தான் நாமும் சுவைக்கிறோம். சினிமாக் கொட்டகையில் அடைந்து கிடப்பதால் க்ஷய ரோகிகள் விட்ட காற்றைத்தானே மற்றவர்களும் சுவாசிக்க வேண்டும். ஹோட்டல்களில் க்ஷய ரோகிகள் சாப்பிட்ட பாத்திரத்திங்களில் தானே மற்றவர்களும் சாப்பிடவேண்டியிருக்கிறது. சுகாதார முறைப்படி பாத்திரத்தை வென்னீரில் சுத்தம் செய்தா வைக்கிருர்கள் ? ஏதோ ஒரு

## யோகாசன சிகிச்....

தண்ணீரில் அமிழ்த்தி எடுத்துத் துடைத்து வைக்கிருர்கள். அதில் தான் எல்லோரும் சாப்பிடுகின்ருர்கள்.

சினிமாவும், ஹோட்டலும் நோய்களைப் பரிமாறும் சாலை என்று சொன்னுல் மிகையாகாது. இவை இரண்டும் தான் இன்று மிகப் பெரிய வியாபாரமாகவும், லாபகரமானதாகவும் இருக்கிறது. பொது மக்கள் சினிமா போவதை தடுக்கவும் முடியாது. ஹோட்டலின் அவசியம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. ஆனுல் போதுமான சுகாதாரம் கடைப் பிடிக்காமையினுல் இன்று பலவித தொத்து நோய்கள் வரக் காரணமாகிறது.

க்ஷய நோய் அநேகமாக நுரைசரல்களுக்குத்தான் அதிகம் வருகிறது. மற்றும் எலும்பிலும், குடலிலும், மற்றப் பாகங்களிலும் வரும். க்ஷய கிருமிகள் மிக சக்திவாய்ந்தவையாய் இருக்கின்றன. இக்கிருமிகள் எங்கு குடிபுகுந்தாலும் அந்த இடத்தில் தன் வம்சத்தை விருத்தி செய்துகொண்டு அப்பாகத்தை உணவாக சாப்பிட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுகின்றன. இக்கிருமியைக் கொல்லும் அளவு சக்தி வாய்ந்த மருந்துகளை இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதுவரை க்ஷயத்திற்கு எத்தனையோ வித மருந்துகள் வந்து விட்டன. எதிலும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு பக்கம் ஏதோ சிறிதளவு கட்டுப்படுத்தினுலும் மறுபக்கம் மக்களிடையே வெகுவேகமாகப் பரவிக் கொண்டே வருகிறது.

மக்கள் சுகாதார பழக்க வழக்கங்கள் சரிவர அனுசரிக்கும் வரை இந்த வியாதியைக் கட்டுப்படுத்த முடியாது. கண்ட கண்ட இடத்தில் எச்சல் துப்பும் பழக்கம் நம்மிடையே இருக்கிறது. க்ஷய ரோகக்காரர்களும் சளியை வெளியே துப்புவார்கள். அதில் கோடிக் கணக்கில் க்ஷயக் கிருமிகள் இருக்கும். காற்றில் அவை கலந்து மற்றவர்களுக்கும் மூச்சின் வழியே செல்கிறது.

இதைத் தடுக்க வேண்டுமானுல் யோகாசனப் பயிற்சி ஒன்று தான் சரியான தடுப்பு முறை. பத்மாசனத்தில் உட்கார்ந்து, நாடிசுத்தி, கபாலபாதி, உஜ்ஜயீ, பஸ்திரிகா போன்ற பிராணுயாமப் பயிற்சிகள் செய்தால் நுரையீரலில் சென்ற க்ஷயரோகக் கிருமிகள் மடிவதுடன், ரத்தமும் சுத்தமாகி பிராணவாயு அதன் மூலம் மற்ற பாகங்களுக்கும் சென்று வேறு எலும்பு, குடல், போன்ற பாகங்களில் க்ஷயம் பீடித்திருந்தாலும் விலகும். க்ஷயரோகக் கிருமிகள் மடிய பிராணவாயு மிக்க அவசியம்.

அத்துடன் மத்யாசனம், சர்வாங்காசனம், விபரீதகரணி சிரசாசனம் போன்ற ஆசனங்களும் செய்து வந்தால் க்ஷயரோகம் வராமல் இருப்பதுடன் க்ஷயரோகம் வந்தவர்களும் குணமடைவார்கள். எந்த நோயும் ஏழை என்றும் பணக்காரன் என்றும் பாராது எல்லோருக்கும் தான் வருகிறது. பணக்காரர்களுக்கு வசதிகள் இருப்பதால் உயரிய மருத்துவமும், சத்துள்ள ஆகாரங்கள் சாப்பிடமுடிகிறது. ஏழை என்ன செய்ய முடியும். நோய்களுக்கு இரையாகிருன்.

யோகாசனம் பழக காசு பணம் செலவில்லை. கருவிகள் வாங்க அலையவேண்டியதில்லை. மருந்துகளுக்கும், மருத்துவர்களுக்கும் பணம் வேண்டுமே என்ற கவலையில்லை. ஏழை முதல் பணக்காரர் வரை, ஆண்கள் பெண்கள், குழந்தைகள் எவ்வயதிலும் பயிலலாம். யோகாசனம் ஒரு தினசரிப் பழக்கமாக்கிக்கொண்டு விடவேண்டும். சாப்பிடுவது, படுப்பது, வேலை செய்வது எப்படிப் பழக்கமோ அம்மாதிரி யோகாசனமும் தினசரி பழக்கமாக்கிக்கொண்டு விடவேண்டும்.

காலைக் கடனை முடித்ததும் வெறும் வயிற்றில் ½ மணிநேரமோ ஒருமணி நேரமோ செய்து வந்தால் எந்நாளும் நோய்கள் வராமல் ஆரோக்கியமாய் இருப்பதுடன் நோய்கள் வந்தாலும் ஆசன நிபுணர்களின் ஆலோசனையை எடுத்து செய்துவரின் அநேக நோய்கள் விலகும்.

நோய்கள் முற்றுமுன் யோகாசன சிகிட்சையை நாடினுல் சீக்கிரமாக குணமடைந்து விடும். நாள் ஆக ஆக அதிக நாள்பிடிக்கும். அநேகமாக யோகாசன சிகிட்சையை நாடுவோர், எல்லாவித வைத்தியங்களும் பார்த்து விட்டு, முடியாத போது யோகாசனமாவது செய்து பார்க்கலாம் என்று வருகிருர்கள். அம்மாதிரி நோய்களும் எத்தனையோ குணமாகியிருக்கின்றன.

அனைவரும் யோகாசனம் பழகி ஆரோக்ய நல்வாழ்வு அடையப் பிரார்த்திக்கிறேன்.

(வானெலிப் பேச்சு)

# கொழும்புத் துறை முகக்குழு

### பொறித்துறை

**1962 ம் ஆண்டில் இரு விடயங்கள் முதலிடம் பெற்றன. இவற்றுளொன்று முன்னேற்றம்; மற்றென்று, நிர்மாணம், அபிவிருத்திவேலை ஆகியன சம்பந்தமாக இலக்குகளைத் தவருது அடைதலாகும். நிர்மாண வேலைக்குவேண்டிய பொருள்களை வழங்கல், எதிர்பாராத காலநிலை முதலிய வழக்கமான கஷ்டங்கள் குறுக்கிட்ட போதிலும், இலக்குகளை எய்தியுள்ளோம். நிர்மாண, அபிவிருத்தி வேலையிற் சிறந்த முன்னேற்றம் கண்டோம். இவ்வாண்டில், மீன்பிடித்துறைகள், காங்கேசன்துறைத் துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தி வேலை சம்பந்தமாகத் திட்டம் வகுக்கும் கட்டம் நிறைவேறியது. இதன்விளைவாக, அடுத்த ஆண்டில் நிர்மாண வேலையை முன்கூட்டி ஆரம்பிக்கக் கூடியதாயிருக்கும்.**

குறித்த ஆண்டு முழுவதிலும் பொறி தொழிலாளரின் வேலை திருப்திகரமாக நடைபெற்றது. ஒரேயொருசிறிய சம்பவம் மட்டும் நிகழ்ந்துள்ளது. தொழிலாளர் அடிக்கடி ஆயுள்வேத வைத்தியரின் வைத்தியப்பத்திரங்களைச் சமர்ப்பித்து வேலைக்கு வராதிருந்தமையால் வேலையை இடையருது செய்வதும் இலக்கை அடைவதும் பாதிக்கப்பட்டன. குறித்த ஆண்டில் தொழில் வைத்திய உத்தியோகத்தர் 64 பற்றவைப்போரைப் பரிசோதனை செய்தார். அவரது சிபார்சுகளின் பேரில் இலவசப் பால் விநியோகம் அனுமதிக்கப்பட்டது.

பொதுவாக, பிரதான தொழிற் சங்கங்கள் தங்கள் யோசனைகள் விடயத்தில் நியாயமானமுறையில் நடந்துகொண்டன. பல பிரச்னைகள் திருப்திகரமாகத் தீர்த்து வைக்கப்பட்டமை சங்கங்களுக்கும் இப்பகுதிக்கும் திருப்தியளிப்பதாகும்.

கொலன்னுவையிலுள்ள இலங்கை பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்தின் குதங்களுக்கு முதல்முதலாக 14.3.62 ந் தேதியன்று எண்ணெய் வழங்கப்பட்டது. வாயு எண்ணெயும் மண்ணெண்ணெயும் "இவோஹோவா" என்னும் ருஷ்ய எண்ணெய்க்கப்பலிலிருந்து குழாய் மூலம் செலுத்தப்பட்டன. எண்ணெய்த் துறையில் திறப்பு விழாவைக் கனம் ரீ. பி. இலங்கரத்ன ஆரம்பித்துவைத்தார்.

### கப்பற்போக்குவரத்து

இவ்வாண்டில் பலதேசங்களின் கப்பல்கள் கொழும்பு, காலி, திருக்கோணமலை ஆகிய துறைமுகங்களுக்கு விஜயஞ்செய்தன. இம்மூன்று துறைமுகங்களிலும் கபபல்கள் நங்கூரமிடுவதில் அதிக தாமத மேற்படவில்லை. இது விடயத்திற் கொழும்பில் அதிக முன்னேற்றம் காணப்பட்டது. ஊழியரிடையே அமைதியின்மை ஏற்பட்டமையால், கொழும்புத்துறைமுகத்தில் துறைமுகசேவைகள் சில சமயங்களிற் தடைப்பட்டது. ஒரு தடவை ஆங்கிலக் கிரிகெற் கோஷ்டி பிரயாணம் செய்த "கன்பெரு" கப்பலும் இவ்விதம் பாதிக்கப்பட்டது. ஊழியரின் உண்மையுள்ள ஒரு பிரிவினர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் காரணமாக, விளையாட்டில் ஆர்வமுள்ள இத்தேசத்துப் பொதுமக்கள் வழக்கமான விளையாட்டுப்போட்டியைக் கண்டுகளிக்கும் பாக்கியத்தை இழக்காதிருந்தனர். 4 உத்தியோகத்தரின் தெரிவுமூலம் வழிவாட்டி சேவைக்கு ஆள்திரட்டும் வேலை முடிவடைந்தது. இவர்களிலொருவர் இப்பொழுது பயிற்சியளித்துவருகிருர். ஏனையோர் கூடிய சீக்கிரம் வருவரென்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடலில் சேவை புரியும் இலங்கையர் அரசாங்கம் நடத்திய பயிற்சித்திட்டங்களை முடித்த பின்னர் திருப்திகரமாகக் கடமையாற்றுகின்றனரெனக்கூறும் அறிக்கைகள் கிடைத்து வருகின்றன. இப்பொழுதும் இத்தேசத்தவர்களுக்கு முற்றிலும் தெரியாத வழிகாட்டிச்சேவையை இலங்கையர் மயமாக்கும் அரசாங்கக் கொள்கைக்கு இது ஒரு நற்சகுனமாகும். கப்பற்றுறை, கப்பற்பிரிவிற் கடமையாற்றிய கடைசி ஐரோப்பியர் ஓய்வுபெற்றதன் விளைவாக இலங்கையரே இப்பொழுது அங்கு கடமையாற்றிவருகின்றனர். புதிய உத்தியோகத்தர் கொழும்புத்துறைமுகக் குழுவினரிடம் பயிற்சிபெற்று, பின்னர், ஐக்கிய இராச்சியத்தில் அரசாங்கப் பயிற்சித்திட்டத்தின்கீழ் மேலும் சிறிதுகாலம் சேவை புரிந்தனர். முன்னர்போலவே இப்பொழுதும் பெருவாழ்வுக் கப்பல்கள் கொழும்புக்கு விஜயம் செய்து வருகின்றன. மிகச் சமீபகாலத்தில் வந்த கப்பல் "ரொட்டர்டாம்" ஆகும். தூரகிழக்குக் கடற்படைத்தலைவரை ஏற்றிவந்த "ம. ம. சே. அலேட்" உட்பட பல்வேறு தேசங்களின் கடற்படைக்கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு விஜயம் செய்தன. சாம்ராச்சியக் கடற்படைப்பிரிவுகள் நடத்திய பயிற்சியின்போது திருக்கோணமலை அவற்றை உபசரித்தது. பல துறைமுகங்களிலும் வர்த்தக நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற்றுத் தேசத்தின் சுபீட்சத்திற்குதவின.

### தொழிலுறவும் நல்வாழ்வும்

துறைமுகத்தில் கணக்குவைக்கும் லிகிதரின் வேலையை உறுதிப்படுத்தும் பொருட்டு கணக்குவைக்கும் லிகிதர் ஒப்பந்தக்காரர் சங்கம் ஒழுங்குசெய்துள்ள தொகுதி, நிருவாக விடயத்திலும் நிதிவிடயத்திலும் கஷ்டத்திற்குள்ளாகியது. இத்தொகுதியை உறுதியாகவும் திறமையாகவும் நடத்துதற்கான முயற்சிகளை இப்பகுதி எடுத்து வந்தது. இந்நோக்கத்தை நிறைவேற்றுதற்கு, இத்தொகுதியின் நிதிகளைப் பொறுப்பேற்பது பற்றியும் கப்பல்களில் வேலைசெய்தற்குக் கணக்கு வைக்கும் லிகிதரை நாளாந்தம் தெரிவுசெய்யும் விடயத்தில் மேலும் கண்டிப்பான கட்டுப்பாட்டை அனுசரிப்பது பற்றியும் இப்பகுதி ஆலோசித்துவருகிறது.

பிள்ளைகளுக்குக் குடியிருப்புத் தோட்டத்தில் விளையாட்டு மைதானமொன்றை அமைக்கும்வேலை இப்பொழுது நிறைவேறிவிட்டது. இவ்விளையாட்டு மைதானம் சமீபத்திற் திறக்கப்படும். தொழிலாளரின் சுகாதாரத்தைப் பாதுகாத்தற்கு ஆண்டு வைத்தியப்பரிசோதனைகள், எக்ஸ் கதிர்ப்பரிசோதனைகள், கண் பரிசோதனைகள் முதலியன நடத்தப்பட்டுவருவதாக எனது கடந்த அறிக்கையிற் கூறியுள்ளேன். இவற்றுடன், கிருமியொழிந்த ஒரு பயின்ட் பாலை 30 சதவிலைக்குப் பற்றவைப்போருக்கு வழங்குவதன்மூலம் இத்துறையிற் புதிய வேலை இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தால் தொடர்ச்சியான சொற்பொழிவுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. உணவைக் கையாளும் ஊழியரும் வைத்தியராற் பரிசோதிக்கப்பட்டு இவ்வேலையைக் கவனிக்கத் தகுதியுடையரா என்பது நிச்சயிக்கப்பட்டது.

மத்தியானச் சாப்பாடு, சிற்றுண்டிகள், தேநீர் ஆகியன இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றன. கலாசாரத் துறையிலும், "தொழிலாளர் விளையாட்டு நேர நிகழ்ச்சி" ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டு முறையே ஒலிபரப்பப்பட்டது. "அதிக உணவு பயிரிடும்" முயற்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுத் தொழிலாளரிற் பெரும்பான்மையோரால் ஆதரிக்கப்பட்டுவருகிறது.

### தொழிற்சங்கங்கள்

மொத்தம் 26 பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்களுள. இவை கொழும்புத்துறைமுகக் குழுவின்கீழ் வேலை பார்க்கும் 7,000 ஊழியரின் சங்கங்களாகும். இச்சங்கங்கள் சமர்ப்பிக்கும் பல்வேறு கோரிக்கைகளும் முறையீடுகளும், பொதுவாக, அந்தந்தப் பிரிவுத் தலைவர்களால் ஆராயப்படும். முக்கிய விடயங்களைத் துறைமுக அதிபர் ஏற்றவாறு கவனிப்பார். தொழிற்சங்கங்கள் பேட்டிகோருமிடத்து, கோரிக்கைகளின் தன்மைக்கேற்ப, சங்கப் பிரதிநிதிகள் ஆரம்பத்தில் பிரிவுத் தலைவர்களுடன் விவாதிக்க வசதிகளளிக்கப்படும.

சங்கங்கள் செய்யும் பல்வேறு முறையீடுகளையும் இப்பகுதியின் தொழிலுறவு உத்தியோகத்தர் பார்வையிடுவார். சங்கத்தின் பிரதிநிதிகளுடன் விவாதிக்கையில், இவ்வுத்தியோகத்தர் விடயங்களை நன்கு ஆராய வாய்ப்புண்டென்பதால், சங்கங்கள் முறையீடுகளைச் செய்யும் சந்தர்ப்பங்களை இவர் நன்கு தெரிந்து கொள்ளக்கூடியதாயிருக்கும். இதன் விளைவாக, இவர் சங்கப்பிரதிநிதிகளுக்குப் புத்திமதிகூறி அதன்மூலம் முதலாளிக்கும் ஊழியருக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தமுடியும்.

## தொழில் அமைச்சரின்....

(1 ம் பக்கத் தொடர்)

லட்சியங்களே நிச்சயம் வெற்றி பெறும் என்பதும், சடுதியான தீவிர நடவடிக்கைகள் அவர்கள் நம்பியிருக்கும் சோஷலிஸ ரதத்தின் வீழ்ச்சிக்கும், சுதந்திர சமூகமாக நாம் வாழ்வதற்கு முற்றுப் புள்ளி வைக்கவும், எங்கள் தேசிய, அபிலாசைகளுக்குப் புறம்பான நிலையைத் தோற்றுவிக்கவுமே உதவும் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும்.

எக்காலத்திலுமே நாடு நலம் பெறுவதற்கு நல்லவற்றையே செய்ய வேண்டும். அந்த லட்சியங்களை எய்துவதற்கு ஒரு அரசாங்கம் வழிகாட்டவும் பணிக்கவும் குறிக்கோள்களை அமைக்கவும் பணியாற்றவும் முடியும். ஆயினும் உண்மையான சாதனையை எய்துவதற்கு மக்கள் மனமுவந்து தியாக உணர்ச்சியுடன் பணியாற்ற வேண்டும். ஏனெனில் அவர்கள் தம் நன்னிலைக்காக மட்டுமன்றி தம் எதிர்காலச் சந்ததிக்காகவும் உழைக்கிருர்கள். ஆகவே இன்றும் இனிமேலும் சகல பிரிவு மக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்களென்பதும் சமூகத்துக்கு உண்மையான சேவையாற்றும் மனப்பான்மை எமது முயற்சிகளை அதிகரிப்பதோடு நாட்டுக்கான பொறுப்புணர்ச்சி நமது நடவடிக்கை ஒவ்வொன்றுக்கும் உற்சாகமளிக்குமென்பதும் எனது தளராத நம்பிக்கை.

# கல்லோயா அபிவிருத்தி திட்டம்

கிழக்கிலங்கையிலுள்ள கல்லோயாத் திட்டம், நீர்ப்பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு, மின்சார உற்பத்தி, விவசாயக் குடியேற்றம் ஆகிய வற்றைக் கொண்ட ஒரு பல நோக்க சமூக–பொருளாதாரத் திட்டமாகும். இத்திட்டம், இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் ஒரு உருசிகரமானதும் பலதுறைகளில் இணையற்றதுமான ஒரு பரீட்சையாகும். 1961 ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கல்லோயா ஆற்றின் இடக்கரையில் நிர்வாகப் பொறுப்பு கல்லோயாச் சபையிடமிருந்து அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டபோது கல்லோயாத் திட்டத்தின் ஒரு முக்கிய கட்டம் பூர்த்தியடைந்தது எனலாம். இவ்வேலையில் இத்திட்டத்தின் சாதனைகள் பற்றி சுருக்கமாகவேனும் விளக்குதல் பயனுடைத்தாம்.

**கல்லோயாப் பள்ளத்தாக்கு**

கல்லோயாப் பள்ளத்தாக்கின் சில பகுதிகளில் கி.மு. 3 ம் நூற்றுண்டிலேயே பயிர் செய்யப்பட்டதாகத் தோற்றுகிறது. நாலாயிரத்து முன்னூறு அடி உயரமான மடுல்சீமா மலைகளிலிருந்து ஊற்றெடுத்துப் பள்ளத்தாக்கு வழியே 65 மைல் ஓடி வங்காள விரிகுடாவில் விழும் கல்லோயாவே இப்பகுதிக்கு நீர்வழங்கிவந்துள்ளது. பின்னர் ஒருகாலத்தில் இங்கிருந்த நீர்த் தேக்கங்கள் உபயோகமற்றுப்போகவே இலங்கை வரண்ட பிரதேசத்தின் ஏனைய பகுதிகளின் கதியையே கல்லோயாவும் அடைந்தது. டச்சுக்காரர்களும் பிரிட்டிஷ்காரர்களும் இவற்றை ஓரளவுக்குத் திருத்தி அமைத்தனர். எனினும் தற்போதைய குடியேற்றத் திட்டம் 1949 ம் ஆண்டில் தொடங்கப்படும் வரை சுமார் 26,000 ஏக்கர் நிலம் மாத்திரமே நீர்பாய்ச்சப்பட்டு வந்தது. அக்குளங்களின் கொள்ளளவு கடும் மழை காலத்தில் வெள்ளப் பெருக்கைத் தடுக்கவோ கடும் வரட்சிக் காலத்தில் நீர் தேக்கிவைத்து நீர்ப்பாசனஞ் செய்யவோ போதியதாக இருக்கவில்லை.

கல்லோயா ஆற்றின் குறுக்கே இங்கினியாகலை என்ற இடத்தில் ஒரு அணை கட்டுவது பற்றி நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள் சிலர் 1940 ம் ஆண்டளவில் முதன் முதலாகப் பரிசீலனை செய்தனர். இந்த யோசனையை பல நோக்க அணைக் கட்டுகள் நிர்மாணிப்பதில் நிபுணரான டாக்டர் சலேஜ் அங்கீகரித்தார். பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கும் ஒரு அமெரிக்க எஞ்சினியரிங் தாபனமான மொறிசன் நட்சன் இன்டர்நஷனல் கார்ப்பொரேசன் தாபனத்துக்கு மிடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 1949 ம் ஆண்டில் அவ் ஸ்தாபனம் அணைக் கட்டு, மின் நிலையம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான வேலைகளை ஆரம்பித்தது.

**அணைகளும் மின்பொறித் தொகுதியும்**

பிரதான அணை ஆற்றுப்படுக்கையிலிருந்து 120 அடி உயரமுடையது. அதன் நீளம் 8,000 அடியும் உச்சியில் அகலம் 30 அடியுமாகும். இவ்வணைக்கட்டினால் உருவாக்கப்பட்ட வாவி இலங்கையின் முதலாவது பிரதமரின் பெயரிட்டு சேனநாயக்கா சமுத்திரம் என அழைக்கப்படுகிறது.

இவ்வாவியின் கொள்ளளவு 7,70,000 ஏக்கரடியும் இதன் நீர்ப்பரப்பு 35·8 சதுர மைல்களுமாகும். இதன் வருடாந்த வழிநீரின் அளவு 2,64,000 ஏக்கரடியாகும். நீரேந்து பரப்பு 384 சதுர மைல்களாகும். வெள்ளக்கட்டுப்பாட்டுத் தேவைகளைப் பொறுத்தவரையில் மேலும் 10 அடி கூடிய உயரமும் 10,00,000 ஏக்கரடி கொள்ளளவும் உள்ள நீர்த்தேக்கம் பொருளாதார ரீதியில் லாபகரமானதாயிருந்திருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. நீர்த்தேக்கத்திலிருந்து நீர்ப்பாசனத்திற்காகவும் மின்னுற்பத்திக்காகவும் நீர் பெறுவதற்கான போக்குவாயாக 13 அடிவிட்டமுள்ள ஒரு கொங்கிறீற்றுக் குழாய் வாய்க்கால் அணையின் அடிவாரத்தில் பதிக்கப்பட்டிருக்கிறது. கல்லோயாவின் கிளைகளில் வேறு சிறு நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எக்கல்லாறு போன்ற நீர்த்தேக்கங்கள், அவை அமைந்துள்ள இயற்கை எழில் மிக்க சூழல் காரணமாக சேனநாயகா சமுத்திரத்தையும் அழகில் தோற்கடித்து விடுகின்றன. உல்லாசப் பிரயாணத் தொழில் வளர்ச்சிக்கு உகந்த இடமாகவும் அவை திகழ்கின்றன.

இந்த நீர்த்தேக்கங்கள் எல்லாம் அமைக்கப்பட்டு, இப்பகுதியிலுள்ள ஆறுகள் கட்டுப்படுத்தப்பட்டதும் பெரும் சேதம் விளைவிக்கும் வெள்ளப் பெருக்கம் முற்ருக நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்த்தேக் கத்தின் இடது பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள கொங்கிறீற்று வழிநீரணை 60 அடி உயரமும் 1,050 அடி நீளமும் உடையது. அணையுச்சியிலிருந்து இயக்கப்படும் கதவுகளைக் கொண்ட 5·75 அடிச் சதுரமான ஐந்து மடைகளால் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டத்தைத் தாழ்த்த முடியும். ஒவ்வொரு மடையின் வழியாகவும் 1,200 கியூசெக் நீர்வெளியேற்றலாம்.

நான்கு விசைச்சக்கரங்களுக்கும் பிறப்பாக்கிகளுக்கும் இடமளிக்கும் வகையில் பொறித்தொகுதி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது ஒவ்வொன்றும் 2,500 கி. வா. மின்சக்தி உற்பத்தி செய்யும் இரு விசைச் சக்கரங்களே இயங்குகின்றன. தற்போதைய ஆகக்கூடிய உற்பத்தி சுமார் 4,400 கில்லோவாட்டுகளாகும். இப்பொழுது இங்கினியாகலையிலிருந்து கிழக்குக்கரையிலுள்ள பட்டினங்களுக்கும் மட்டக்களப்புக்கும் வழங்கப்படுகிறது.

## ‘திட்டத்துக்கு சிறந்த எதிர்காலமுண்டு’

### சோவியத் நிபுணர் கருத்து

“இந்நாட்டின் பொருளாதார ஸ்திரம்பற்றி அக்கறை கொண்டுள்ள எவரும் கல்லோயாத் திட்டத்தின் சாதனைகளைப் பாராட்டாதிருக்க முடியாது. அது எம்மைக் கவர்ந்து விட்டது. இந்நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவது சம்பந்தப்பட்டவரையில் இத்திட்டத்திற்கு ஒரு சிறந்த எதிர்காலம் உண்டு” என்று கல்லோயாவின் பிரதான இடங்களைப் பார்வையிட்டபின் சோவியத் பொருளாதார ஆலோசகர் திரு. சமுசென்கோ கூறினர்.

இத்திட்டம் எதிர்காலத்தில் தனது பல தேவைகளில் இந்நாடு சுயதேவைப் பூர்த்தியை அடைய உதவும் என்றும் பிரமாண்டமான திட்டங்கள் பற்றி நன்கு பரிச்சய முள்ளவர்களுக்கே அவற்றின் பெறுமதி தெரியும் என்றும் அவர் மேலும் கூறினர்.

சிரேஷ்ட எஞ்சினியர் திரு. மலுட்டின், மொழி பெயர்ப்பாளர் திரு. அபனசியேவ் ஆதியோரும் திரு. சமுசென்கோவுடன் வந்திருந்தனர். அம்பாந்தோட்டை பருத்தித் திட்டத்திற்கு விஜயஞ் செய்யும் வழியில் சோவியத்கோஷ்டி கல்லோயாவில் ஒரு நாள் தங்கியிருந்தது.

வருடத்திற்கு இரண்டரைச் சத வீத வட்டியுடனேயே சோவியத் ரஷ்யா ஒரு நீண்டகால அடிப்படையில் பல்வேறு திட்டங்களுக்கு உதவியளிக்கிறதென்றும் இவ்வுதவி காரணமாக இலங்கை தனது வெளிநாட்டுச் செலாவணியில் பெருந்தொகையை மிச்சம் பிடிக்கலாம் என்றும் அதன் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் குறையுமென்றும் பல பொருட்களில் இந்நாடு சுய தேவைப் பூர்த்தியை அடையுமென்றும் திரு. சமுசென்கோ கூறினர்.

## சாகுபடி....

(1 ம் பக்கத் தொடர்)

அதிபரினது அல்லது உதவி அரசாங்க அதிபரினது நேரடி ஆணையின் கீழ் செய்யப்படவேண்டுமென்றும் இவர்கள் மாவட்ட விவசாயக் குழுக்களுடன் ஆலோசித்து அவற்றின் உதவியுடன் ஆய்வுகளுக்கான அமைப்பு வேலைகளை விபரமாகத் தயாரிக்க வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானித்தது.

சாகுபடி செய்யப்படாமலிருக்கும் நிலங்களின் விஸ்தீரணம்பற்றியும் அவை எங்கெங்கே யிருக்கின்றனவென்பதுபற்றியும் குடிசன மதிப்பு, புள்ளிவிபரப் பகுதியில் ஏற்கனவே கிடைக்கக் கூடியதாக இருக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இடங்களைக் கண்டறிந்தவுடன் சாகுபடி செய்யப்படாத காரணங்களையும் அதற்குரிய நிவாரண நடவடிக்கைகளையும் வயலிலேயே வைத்து ஆராய்ந்தறிய வேண்டும். அதன் பிறகு இந்த விபரங்களை கமத்தொழில் சேவைக் கொமிஷனருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

## புதிய தொழிற்சாலை

இலங்கை அரசாங்க தோட்டக் கூட்டுத்தாபனம், மாத்தறை மாவட்டத்திலுள்ள கனுபோவிட்டியான என்னும் இடத்தில் ஒரு தேயிலைத் தொழிற்சாலையை புதிதாக விரைவில் நிறுவும்.

மேட்டுநில குடியிருப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள், தேயிலை நடுவதற்காக அவர்களுக்குப் பல ஏக்கர் நிலம் பராதீனப்படுத்தப்பட்டுள்ளது. அப்படித் தேயிலை செய்கைபண்ணும் பகுதியிலேயே இத்தொழிற்சாலையும் நிறுவப்படுகிறது. மேட்டு நிலத்தில் தேயிலை செய்கை பண்ணுபவர்களிடமிருந்தும் சிறு தோட்டக்காரர்களிடமிருந்தும் இத்தொழிற்சாலை தேயிலைக் கொழுந்தை வாங்கும்.

## மலகூடம் நிறுவுவதற்கான உதவித்திட்டம்

மலகூடம் நிறுவுதற்குப் பணமில்லாமல் கஷ்டப்படும் வறிய மக்களுக்கு மாத்திரம் பண உதவியளிப்பதற்கென்று சௌக்கிய அமைச்சு ஓர் திட்டத்தை வகுத்திருக்கிறது.

இதன் பிரகாரம் 1962–1963 ம் ஆண்டில் இத்தீவு முழுவதற்குமாக மொத்தம் 4 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை இங்குள்ள பதினைந்து சௌக்கிய சேவை அத்தியட்சர்கள் பிரிவுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

இப்பணத்தை ஒரு வீட்டுக்காரருக்கு 25 ரூபா வீதம் சௌக்கிய சேவை அத்தியட்சர் வழங்குவார். நீங்கள் நினைப்பது போல், நாலுபக்கமும் அடைக்கப்பட்டதும், கூரை வைக்கப்பட்டதுமான மலகூடத்தை இந்த இருபத்தைந்து ரூபாவைக் கொண்டு கட்ட முடியாது.

பக்கங்களையும், கூரையையும் நீங்கள் நினைத்தபடி நிறுவிக்கொள்ளலாம், ஆனல் சௌக்கியப் பகுதி தரும் இருபத்தைந்து ரூபாவும் மலக்குழி அமைப்புக்கு மட்டுமே பயன் படுத்தப்பட வேண்டும். இந்தக் குழியைச் சௌக்கியப் பகுதி காட்டித்தரும் மாதிரியில் அமைத்தால் தான் இப்பணம் உங்களுக்குக் கிடைக்கும். இதை நிறுவும் மாதிரியைக் காட்டித் தருவதற்கு உங்கள் ஊரில் கடமையாற்றும் பொதுச் சௌக்கியப் பரிசோதகர் உங்களுக்கு உதவியளிப்பார். ஆகவே இந்த உதவிப் பணத்தை வேண்டுபவர்கள் முதலில் அவரைச் சந்தித்து ஆலோசனை பெறவேண்டும்.

குடியேற்றத் திட்டங்களிலும், கிராம விஸ்தரிப்புத் திட்டங்களிலும் மலகூடம் அமைப்பதற்கு காணிக் கமிஷனர் பகுதி பண உதவியளித்துவருகிறது. அப்பகுதியிலிருந்து ஏற்கெனவே உதவி பெற்றவர்களுக்கு, சௌக்கியப் பகுதி பணம் வழங்கமாட்டாது.

ஒவ்வொரு வீட்டுக்கும் மலகூடம் அவசியம். மலகூடமில்லாத இடங்களில் வசிப்பவர்கள், முக்கியமாகச் சிறுவர்கள் பல வியாதிகளுக்கும் ஆளாகிறார்கள். எனவே வறியவர்களாயுள்ளவர்கள் அனைவரும் இவ்விதமான உதவியைப் பயன்படுத்திக் கொள்வது நன்மை பயப்பதாகும்.

மல கூட வசதிகள் இல்லாத ஆரம்பப்பாடசாலைகளுக்கும் இந்த உதவிப் பணத்தை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு அந்தப்பாடசாலைகளின் பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பீரங்கிப் படை......** (1 ம் பக்கத் தொடர்)

செய்வது சாத்தியமாகுமாவென்று விசாரணைகள் செய்யப்பட்டன.

முகைதீனுக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்களின் வைத்திய அறிக்கைகள் இதன் தொடர்பாக ருஷ்ய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதற்கு நீண்ட தூரப்பயணத்தால் அவரது தேகநிலை பாதிக்கப்படக்கூடுமாதலால் அவர் ருஷ்யாவில் சிகிச்சைபெறுவது உகந்ததல்லவென்று சோவியத் வைத்திய நிபுணர்கள் கருதுவதாக ருஷ்ய ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. பீரங்கிப்படை வீரர் முகைதீனுக்கு அவர் இப்போதிருக்கும் இடத்திலேயேவைத்துச் சிகிச்சையளிக்க முடியுமென்று தாங்கள் சிபார்சு செய்யப்போவதாகவும் அந்த ருஷ்ய வைத்தியர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த சிபாரிசுகளை இலங்கை அரசாங்கம் இப்போது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் முகைதீனுக்குச் சிகிச்சையளிப்பதற்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் இதர வழிகளையும் அரசாங்கம் தொடர்ந்து ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இராணுவப் படைக்கு அழைக்கப்பட்ட தொண்டர்படை வீரருக்குரிய முழுமையான சம்பளத்தையும் படிகளையும் இப்போது பெற்றுவருகிறார் பீரங்கிப் படைவீரர் ஜனுப் முகைதீன்.

இலங்கை, வாழைச்சேனை சஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 9476—5,008 (4/63)